ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1691/13 - 2011 පෙබරවාරි 01 වැනි අඟහරුවාදා - 2011.02.01
*1691/13 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.- 21/78.*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர் கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, 2009, ஒகத்து 27 ஆந் திகதிய 1616/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1995, நவெம்பர் 7 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை, சப்பிரகமுவ பல்கலைக்கழகம் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையில் அத்தகைய அட்டவணையின் நிரல் I இல் காணப்படும் "பிரயோக விஞ்ஞானங்கள் பீடம்" என்னும் விடயத்தினையும், அதற்கான நிரல் II இல் காணப்படும் நேரொத்த பதிவுகளையும் நீக்கம் செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் அக்கட்டளையைத் திருத்துகின்றேன்.*

திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர் கல்வி அமைச்சர்.

உயர் கல்வி அமைச்சு,
கொழும்பு,
2011, சனவரி 25.

**"அட்டவணை**

| நிரல் I<br>பீடம் | நிரல் II<br>துறைகள் |
|---|---|
| பிரயோக விஞ்ஞானங்கள் பீடம் | 1. இயற்கை வளங்கள் துறை<br>2. பௌதீக விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் துறை<br>3. உணவு விஞ்ஞானங்கள் மற்றும் தொழில்நுட்பவியல் துறை<br>4. கணக்கிடலும் தகவல் முறைமைகளும் துறை<br>5. விளையாட்டு விஞ்ஞானமும் உடற்றொழில் கல்வித்துறை.". |

*2 - 406*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.